# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 3597/D/2019 & SA 3579/D/2019**

திரு. K. சண்முகம் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர்,
வாலாஜாபாத் பேரூராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | SA 3597/D/2019 | SA 3579/D/2019 |
|---|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 14.11.2018 | 08/09/2018 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 07.01.2019 | 27.11.2018 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 28.12.2018 | 14.11.2018 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.04.2019 | 20.04.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திருமதி. V.பிரேமா, செயல் அலுவலர், வாலாஜாபாத் பேரூராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் வாலாஜாபாத் பேரூராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுக்களில், சர்வே எண்.178-ல் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பாக சென்னை

உயர்நீதிமன்ற நீதி பேராணை எண்.18664/2017 நாள் 02.01.2018 அன்று வெளியிடப்பட்ட ஆணையின் நகல், இந்த நீதி பேராணையின்படி, வாலாஜாபாத் பேரூராட்சி செயல் அலுவலரால் ஆக்கிரமிப்பு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரம், சர்வே எண்.178-ல் அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு செலவிடப்பட்ட தொகையின் விவரம் மற்றும் பூங்காவில் உடற்பயிற்சி கூடம், நடப்பவர்களுக்கு வழி தடம் அமைத்து தருவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் ஒரே பொருள் குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(1)-ன் கீழ் தனித்தனியே தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தமது இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை மேற்குறிப்பிட்டவாறு தனித்தனியே இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களும் இன்று (04.11.2020) ஒருசேர தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானவை என்று முடிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக்கொள்கிறது. பொது அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தி இல்லையெனில், மனுதாரர் இவ்வாணையத்தின் 9499933592 என்ற அலைபேசி எண் வாயிலாக தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 3597/D/2019 & SA 3579/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர்,
வாலாஜாபாத் பேரூராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு. K. சண்முகம், த/பெ.E.குப்புசாமி,
எண்.19 A, அப்பாஜ் தெரு, மெக்ளின்புரம்,
வாலாஜாபாத், காஞ்சிபுரம் மாவட்டம்.

Copy to: SA 3597/D/2019 & SA 3579/D/2019
SNPA 06.11.2020